# <u>மானியங்கள்</u>

## <u>குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள்</u>

மாநிலத்தில் முதலீட்டை ஈர்ப்பதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மானிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கீழ்கண்ட மானியங்கள் வழங்கப்படுகிறது.

**1, முதலீட்டு மானியம்**

**முதலீட்டு மானிய திட்டத்தின் சிறப்புகள் கீழ்கண்டவாறு**

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.150 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.
- குறு நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் கூடுதலாக 10 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.
- மகளிர் /ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் நடத்தி வரும் தொழில் நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் கூடுதலாக 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வழங்கப்படுகிறது.
- மாசற்ற மற்றும் சுற்றுச்சூலில் பாதுகாக்கும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் கூடுதலாக 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.
- நடைமுறையில் உள்ள குறு மற்றும் சிறு உற்பத்தி தொழில் நிறுவனங்கள் முறையே சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களாக உயர்வு பெறும் பட்சத்தில் அந்நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில் கூடுதலாக 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் நிதியாண்டில், 3545 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.36000 இலட்சம், 2022–23 ஆம் நிதியாண்டில், 1916 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.24251.90 இலட்சம், 2023–24 ஆம் நிதியாண்டில், 2389 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.32836.91 இலட்சம் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024–25 (24.10.2024 வரை) 700 நிறுவனங்களுக்கு ரூ.10218.00 இலட்சம் முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2. சம்பளப்பட்டியல் மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தப்பட்டிருப்பின் ஊழியர்களின் வருங்காள வைப்பு நிதிக்கு நிறுவனத்தின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியருக்கு அதிகபட்சமாக ரூ.24000/- வரை மூன்று ஆண்டுகளுக்கு சம்பள பட்டியல் மானியமாக வழங்கப்படும். மாநிலத்தில் அனைத்து பகுதிகளிலும் நிறுவப்படும் குறு உற்பத்தி நிறுவனங்கள், தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய வட்டாரங்கள் சென்னையிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவிற்கு உட்பட்ட புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் மாநிலத்தில் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மொத்த பணியாட்களின் எண்ணிக்கையில் 25 விழுக்காட்டிற்கு மேல் மாற்றுத்திறன் படைத்தவர்களை பணியில் அமர்த்தும் நிறுவனங்களுக்கு சம்பள பட்டியல் மானியம் வழங்கப்படும்.

2021-22ஆம் நிதியாண்டில், 6 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.46 இலட்சம், 2022-23 ஆம் நிதியாண்டில், 81 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.174.72 இலட்சம் , 2023-24 ஆம் நிதியாண்டில், 99 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.215.72 இலட்சம் சம்பளப்பட்டியல் மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024-25 (24.10.2024 வரை) 35 நிறுவனங்களுக்கு ரூ.35.84 இலட்சம் சம்பளப்பட்டியல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

3. குறைந்தழுத்த மின் மானியம்

குறைந்தழுத்த மின் மானியம், புதிய மற்றும் நடப்பு தொழில் நிறுவனங்களின் விரிவாக்கத்திற்காக வணிக ரீதியாக உற்பத்திய தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாளில் எது பிந்தயதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு மின் பயன்பாட்டு தொகையில் 20 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் நிதியாண்டில், 1042 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.859.00 இலட்சம், 2022-23 ஆம் நிதியாண்டில், 840 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.849.24 இலட்சம், 2023-24 ஆம் நிதியாண்டில், 609 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.545.51 இலட்சம் குறைந்தழுத்த மின்மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024-25 (24.10.2024 வரை) 412 நிறுவனங்களுக்கு ரூ.404.44 இலட்சம் குறைந்தழுத்த மின்மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

4. பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதலுக்கு உட்பட்டிருப்பின் ரூ.5 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5 ஆண்டுகளுக்கு 5 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.25.00 இலட்சம் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படும். அதுபோல உத்தரவாத நிதி ஆதாரத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.2 கோடி வரையிலான

கடன்களுக்கான வட்டியில் 5 விழுக்காடு அதிகபட்டசமாக ரூ.20 இலட்சம் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

2021–22ஆம் நிதியாண்டில், 809 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.239,87 இலட்சம், 2022–23 ஆம் நிதியாண்டில், 985 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.503.95 இலட்சம் , 2023–24 ஆம் நிதியாண்டில், 897 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.791.91 இலட்சம் பின்முனை வட்டிமானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024–25 (24.10.2024 வரை) 98 நிறுவனங்களுக்கு ரூ.41.17 இலட்சம் பின்முனை வட்டிமானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**5, ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றலை சேமித்து, உற்பத்தி செலவினங்களை குறைத்து, உலக சந்தையில் தங்களது போட்டி திறனை அதிகப்படுத்திட ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிகை செலவில் 75 விழுக்காடு அதிகபட்சம் ரூ,1.00 இலட்சம் வரையும் ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழிற்நுட்பம், நிறுவப்படும் எந்திரங்களுக்கான மதிப்பில் 50 விழுக்காடு அதிகபட்சமா ரூ.10.00 இலட்சம் வரையும் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

2021–22ஆம் நிதியாண்டில், 358 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.213,54 இலட்சம், 2022–23 ஆம் நிதியாண்டில், 250 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.244.14 இலட்சம், 2023–24 ஆம் நிதியாண்டில், 208 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.204.55 இலட்சம், ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024–25 (24.10.2024 வரை) 29 நிறுவனங்களுக்கு ரூ.46.4 இலட்சம் ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**6, தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானிய திட்டம்**

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தரமான செயல்முறை மற்றும் பொருட்களை உருவாக்குவதற்கான தரச் சான்றிதழ்களான சர்வேதேச தரச் சான்றிதழ் ISO 9000 / ISO 9001/ ISO 14001/ ஆபத்து பகுப்பாய்வு மற்றும் நெருக்கடியான கட்டுப்பாட்டு (HACCP), ISO 22000, நல்ல சுகாதார நடைமுறைகள் சான்றிதழ் (GHP), நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் (GMP), இந்திய தரச்சான்றிதழ் (BIS), பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ் (ZED) அல்லது இந்தியாவில் தகுதிவாய்ந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு தரச்சான்றிதழ் பெறுவதை ஊக்கப்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செலுத்திய கட்டணம், தேசிய தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் திரும்ப வழங்கப்படுகிறது.

மேலும், குறு,சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் தங்களது ஏற்றுமதியினை அதிகரிக்கும் நோக்கத்தில் ஏற்கெனவே தரச்சான்றிதழ் மானியம் பெறாத குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் தங்களது சர்வதேச தரச்சான்றிதழ்களை முதன் முறையாக புதுப்பிக்க செலுத்தும் கட்டணத்தில் 25 விழுக்காடு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

2021–22ஆம் நிதியாண்டில், 173 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.150,01 இலட்சம், 2022–23 ஆம் நிதியாண்டில், 248 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.249.24 இலட்சம், 2023–24 ஆம் நிதியாண்டி , 295 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.348.56 இலட்சம் தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024–25 (24.10.2024 வரை) 38 நிறுவனங்களுக்கு ரூ.65.35 இலட்சம் தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**7, மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்**

மாநிலத்தில் உயர் வளர்ச்சி திறன் கொண்ட சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வசதிக்காக, உற்பத்தி மற்றும் சேவைத் துறை இரண்டிலும், ஆரம்ப பொது சலுகைகளைப் பயன்படுத்தி எஸ்எம்இ எக்ஸ்சேஞ்ச் மூலம் பங்கு மூலதனத்தை திரட்டுவதற்கு அரசு ரூ.5.00 இலட்சம் அதிகபட்சமாக ஆரம்ப பொது சலுகைகளை பெறுவதற்கு செலவிட்டப்பட்ட தொகையில் 20 விழுக்காடு திரும்ப வழங்கப்படும்.

2021–22 ஆம் நிதியாண்டி , 1 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.14,16 இலட்சம், 2022–23 ஆம் நிதியாண்டில், 3 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.67.00 இலட்சம், 2023–24 ஆம் நிதியாண்டில், 3 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.89.92 இலட்சம் மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024–25 (24.10.2024 வரை) 1 நிறுவனங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**8. காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடு பதிவுக்கான ஊக்கத்தொகை.**

மாநிலத்தில் அமைந்துள்ள உற்பத்தி சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் தங்கள் காப்புரிமை பதிவுக்காக செலவிடப்பட்ட தொகையில் 75 சதவீதம், ரூ.3 இலட்சத்திற்கு மிகாமலும் மற்றும் வர்த்தக முத்திரை பதிவு அல்லது புவிசார் குறியீடு பதிவுக்காக செலவிட்டப்பட்ட தொகையில் 50 சதவீதம் ஒவ்வொரு பதிவுக்கும் ரூ.25,000 மிகாமல் வழங்கப்படும்.

2021–22ஆம் நிதியாண்டில், 43 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.4.16 இலட்சம், 2022–23 ஆம் நிதியாண்டில், 53 குறு, சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.17.88 இலட்சம், 2023-24 ஆம் நிதியாண்டில், 15 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.9.43 இலட்சம் காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடு பதிவுக்கான ஊக்கத்தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024-25 (24.10.2022 வரை) 10 நிறுவனங்களுக்கு ரூ.10.25 இலட்சம் காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடு பதிவுக்கான ஊக்கத்தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

9. முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்குதல்

தொழில்வளர்ச்சியில் பின்தங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் துவங்கப்படும் புதிய குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்காக வாங்கப்படும் நிலங்களின் மதிப்பில் பதிவுத் துறைக்கு செலுத்தப்படும் முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணத்தில் 50 சதவீதம் திரும்ப வழங்கப்படும்.

2021-22ஆம் நிதியாண்டில், 28 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.12,82 இலட்சம், 2022-23 ஆம் நிதியாண்டில், 39 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.9.88 இலட்சம், 2023-24 ஆம் நிதியாண்டில், 26 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.59.08 இலட்சம் முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2024-25 (24.10.2024 வரை) 5 நிறுவனங்களுக்கு ரூ.9.42 இலட்சம் முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

| கணக்கு பிரிவு | | |
|---|---|---|
| **தலைமை கணக்கு அலுவலர்** | | |
| **இரண்டாம் நிலை அலுவலர்கள்** | **பிரிவுகளின் பெயர்** | **செயல்பாடுகள்** |
| **கணக்கு அலுவலர் (பணம்)** | 1. ஏசிஏ பிரிவு | **பட்டியல்கள்**<br>• திட்டம் சார்ந்த பட்டியல்<br>• சம்பளம் அல்லாத பட்டியல்கள் (ம) இதர செலவின பட்டியல் சார்ந்த பணிகள் |
| | 2. ஏசிபி பிரிவு | **பட்டியல்கள்**<br>• ஊழியர்கள் மற்றும் முன்னாள் ஊழியர்களின் சம்பள பட்டியல்கள்<br>• முன்பண பட்டியல்கள் |
| | 3. காசாளர் பிரிவு | **காசாளர்**<br>• வரவு மற்றும் செலவு பரிவர்த்தனைகள் சார்ந்த பணிகள் |
| **கணக்கு அலுவலர் (தணிக்கை)** | 4. ஏஏ பிரிவு | **பிஏசி மற்றும் ஏஜி தணிக்கை**<br>• பொது கணக்கு குழு பத்திகள், மாநில கணக்காயர் தணிக்கை பத்திகள் தொடர்பான பணிகள், கணக்கு பிரிவின் பணியமைப்பு மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் சார்ந்த பணிகள் |
| | 5. எஸ்ஏபி பிரிவு | **உட்தணிக்கை**<br>• மாவட்ட தொழில் மையம் மற்றும் சார்பு அலுவலகங்களின் உட்தணிக்கை பத்திகள் சார்ந்த பணிகள் |
| | 6. ஏடிஏ பிரிவு | **ஓய்வூதியம்**<br>• அரசு ஊழியர்களுக்கான முன்பணம், பொது வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியதாரர்களின் பணிக்கொடை, ஓய்வூதியம், திருத்திய ஓய்வூதியம் சார்ந்த பணிகள் |
| **கணக்கு அலுவலர் (பட்ஜெட்)** | 7. பிடிபி பிரிவு | **பட்ஜெட்**<br>• தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத்திற்கு அரசிடமிருந்து நிதி பெற்று வழங்குதல்<br>• துறை செலவுகளுக்கான மாதாந்திர அறிக்கை |

| கணக்கு பிரிவு | | |
|---|---|---|
| **தலைமை கணக்கு அலுவலர்** | | |
| **இரண்டாம் நிலை அலுவலர்கள்** | **பிரிவுகளின் பெயர்** | **செயல்பாடுகள்** |
| | 8. ஜிபிசி பிரிவு | • வரவு செலவு திட்ட மதிப்பீடு தயாரித்தல்<br>• அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியை மேற்பார்வையிடுதல் |
| **கணக்கு அலுவலர்** (பட்ஜெட்) | 9. ஏபிஏ பிரிவு | • தமிழ்நாடு பொது துறை நிறுவனங்களுக்கான வரவு மற்றும் செலவு தொடர்பான பணிகள் |
| | 10. ஏடிபி பிரிவு | • மாநில கணக்காயர் மற்றும் கருவூல அலுவலகங்களுடன் மாதாந்திர வரவு (ம) செலவு ஒப்பாய்வு |
| | 11. டால்கோ பிரிவு | • தமிழ்நாடு பொது துறை நிறுவனங்களை கலைக்கும் பணி '(பொறுப்புகள் மற்றும் சொத்துகள் சார்ந்த தீர்வுகள்), நிறுவன தொழிலாளர் பிரச்சனைகள் சார்ந்த பணிகள் |

# திட்டங்கள்

## 1. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS)

(மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டம்)

- பயனாளிகள் 12.05.2023 முதல் www.msmeonline.tn.gov.in/aabcs என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.
- தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவை சார்ந்தவர்களுக்கு சுய வேலை வாய்ப்பினை வழங்குகிறது.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள் :**

| | |
|---|---|
| முகமை | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகம் |
| வயது வரம்பு | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவை சார்ந்த18 – 55 வயதுக்குட்பட்டோர் |
| கல்வித்தகுதி | குறைந்தபட்ச கல்வித் தகுதி இல்லை |
| தகுதியுடைய தொழில்கள் | உற்பத்தி சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்கள் |
| மானியம் | தகுதியான திட்ட மதிப்பீட்டில் 35% முன்முனை மானியம் (அதிகபட்ச வரம்பு ரூ. 1.50 கோடி) |
| பயனாளிகள் தேர்வு | மாவட்ட ஆட்சியரைத் தலைவராக கொண்ட மாவட்ட தேர்வு குழுவால் பயனாளிகள் தேர்வு செய்யப் படுகிறார்கள். |
| திட்டச் செலவில் மானியம் பெற தகுதியான கூறுகள் | • நிலம் – திட்ட மதிப்பில் 20%க்கு மிகாமல்<br>• கட்டிடம் – இயந்திரங்களின் திட்டச் செலவில் 25% க்கு மிகாமல்<br>• சோதனை உபகரணங்கள் மற்றும் கணினி சாதனங்கள்<br>• நடைமுறை மூலதனத்தில் இயந்திர தளவாடங்களின் மதிப்பு மூலதனத்தின் ஒரு சுழற்சி மதிப்பில் 25% க்கு மிகாமல் |
| வங்கி ஒப்பளிப்பு | திட்டத்திற்கான முதலீட்டு தொகையில் 65% வங்கியால் கடன் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. |
| வட்டி விகிதம் | வங்கி விதிமுறைகளின்படி |
| தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 15 நாட்கள் வழங்கப்படுகிறது |
| வட்டி மானியம் | 6% முன்முனை வட்டி மானியம் |

2. **<u>வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)</u>** <u>(மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டம்)</u>

- பயனாளிகள் 01.08.2017 முதல் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.
- வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பினை வழங்குகிறது.

**<u>திட்டத்தின் சிறப்பம்சங்கள் :</u>**

| | |
|---|---|
| முகமை | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகம் |
| வயது வரம்பு | பொது பிரிவினருக்கு 18 வயது முதல் 45 வயது வரை, சிறப்பு பிரிவினருக்கு 18 வயது முதல் 55 வயது வரை |
| கல்வித்தகுதி | குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி |
| தகுதியுடைய தொழில்கள் | வர்த்தகம் சார்ந்த தொழில்கள் மட்டும் |
| திட்ட மதிப்பீடு | அதிகபட்சம் ரூ.15 இலட்சம் |
| விண்ணப்பதாரரின் பங்களிப்பு | சிறப்பு பிரிவினருக்கு 5% மற்றும் பொது பிரிவினருக்கு 10% |
| மானியம் | 25% மானியம் – அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் |
| பயனாளிகள் தேர்வு | மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை தலைவராக கொண்ட மாவட்ட தேர்வு குழுவால் பயனாளிகள் தேர்வு செய்யப் படுகிறார்கள். |
| வங்கி ஒப்பளிப்பு | திட்டத்திற்கான முதலீட்டு தொகையில் 90–95% வங்கியால் கடன் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. |
| வட்டி விகிதம் | வங்கி விதிமுறைகளின்படி |
| திருப்பி செலுத்தும் காலம் | 5 வருடங்கள் |
| நிறுவன இயக்க சரிபார்ப்பு | அரசு மானியத்தை முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய நிறுவனம் இயங்குவது மாவட்ட தொழில் மைய பொது மேலாளரால் உறுதி செய்யப்படும். |
| தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 4 நாட்கள் வழங்கப்படுகிறது |

## 3. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

(மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டம்)

- பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) என்பது இந்திய ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் நிதியுதவி பெற்ற திட்டம்
- வேலையில்லாத இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பை வழங்குகிறது. 01.07.2016 முதல் விண்ணப்பத்தை பதிவு செய்வது முதல் மானியம் வெளியீடு வரை முழு செயல்முறையும் இணையதளம் மூலம் செய்யப்படுகிறது. http://www.kviconline.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணபிக்கலாம்.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள் :**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் செயல்படுத்தும் நிறுவனம் | KVIC, KVIB & DIC | |
| மாவட்ட அளவில் செயல்படுத்தும் முகமை | அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட தொழில் மையம் (DIC) | |
| தகுதி: | • 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு தனிநபரும் PMEGP இன் கீழ் உதவி பெறத் தகுதியுடையவர்கள்.<br>• PMEGP இன் கீழ் வருமான உச்சவரம்பு இல்லை<br>• உற்பத்தித் துறையில் ரூ.10 லட்சத்துக்கும் மேல் மற்றும் வணிகம்/சேவைத் துறையில் ரூ.5 லட்சத்துக்கும் மேலான திட்டத்தை அமைப்பதற்கு, பயனாளிகள் கல்வித் தகுதியாக குறைந்தபட்சம் VIII வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• சுய உதவிக் குழுக்களும் (பிபிஎல்–ஐச் சேர்ந்தவர்கள் வேறு எந்தத் திட்டத்தின் கீழும் பலன்களைப் பெறவில்லை) PMEGP இன் கீழ் உதவி பெறத் தகுதியுடையவர்கள்.<br>• சங்கங்கள் பதிவுச் சட்டம், 1860 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்.<br>• உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள். | |
| திட்ட செலவு | உற்பத்தித் துறைக்கு அதிகபட்ச திட்டச் செலவு ரூ.25 லட்சமாகவும், சேவைத் துறைக்கு ரூ.10 லட்சமாகவும் இருக்கும். | |
| உரிமையாளரின் பங்களிப்பு | ▪ பொது பிரிவினருக்கு 10%<br>▪ சிறப்பு பிரிவினருக்கு 05% | |
| மானியம் | பொது பிரிவினர் | சிறப்பு பிரிவினர் |
| நகர்ப்புறம் | 15% | 25% |
| கிராமப்புறம் | 25% | 35% |

| | |
|---|---|
| தகுதியுடைய தொழில்கள் | உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்கள் மட்டும் |
| பயிற்சி | • 2 வாரங்கள் கட்டாய EDP பயிற்சி |
| வங்கி ஒப்பளிப்பு | திட்டத்திற்கான முதலீட்டு தொகையில் 90–95% வங்கியால் கடன் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. |
| வட்டி விகிதம் | சாதாரண வங்கி வட்டி விகிதம் |
| திருப்பி செலுத்தும் காலம் | • நடைமுறையில் உள்ள விதிகளின்படி |
| நிறுவன இயக்க சரிபார்ப்பு | மூன்றாம் தரப்பு முகவர்களால் நடத்தப்படும் |

## புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் ( நீட்ஸ் )

"புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம்" முதல் தலைமுறை தொழில்முனைவோரை உருவாக்குவதற்காக 2012–13 முதல் செயல்படுத்தப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ், படித்த இளைஞர்களுக்கு 15 நாட்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும், அதில் அவர்கள் தங்கள் தொழில் திட்டங்களைத் தயாரிக்கவும், புதிய தொழில் திட்டங்களின் மூலம், தொழில் தொடங்குவதற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவதற்கும் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சிக்கு பின், திட்ட மதிப்பீட்டில் 25% அதிகபட்சம் 75 இலட்சம் முதலீட்டு மானியத்துடன் 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியமும் ரூ.5 கோடி வரையிலான தொழில் திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் ஆகியவை மூலம் கடன் வழங்கப்படும். மேலும் கூடுதல் 10% முதலீட்டு மானியம் பட்டியலின மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்படுகிறது.
- ரூ.50 இலட்சம் வரையிலான திட்டச் செலவுக்கு, மூலதன மானியம் 2 தவணைகளில் வழங்கப்படும், அதாவது கடன் பெறும் போது 50% மற்றும் மூலதனச் செலவை சரிபார்த்த பிறகு 50%. ரூ.50 லட்சத்துக்கும் மேலான திட்டச் செலவுக்கு 3 தவணைகளில் அதாவது, 50% கடன் பெறும் போது,

மீதமுள்ள 2 தவணைகளில் தலா 25% ஆக மூலதனச் செலவினத்தைச் சரிபார்த்த பிறகு வழங்கப்படும்.

- இத்திட்டமானது ஆண்டுக்கு 1000 தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் 2012–13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ், வயது வரம்பானது 21 வயதிற்குமேற்பட்டு பொது பிரிவினருக்கு 45 வயதிற்கு மிகாமலும் சிறப்பு பிரிவினருக்கு 55 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி/ பட்டயம்/ பட்டம்/ ஐடிஐ / தொழில் பயிற்சி முடித்த முதல் தலைமுறை தொழில்முனைவோர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியுடையவர்கள்.
- பட்டியல் இனத்தவருக்கு 18% இடஒதுக்கீடும், மாற்றுத் திறனாளிகளுக்கு 3% இடஒதுக்கீடும் பழங்குடியினருக்கு 1% இடஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 50% இடஒதுக்கீடு பெண் பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டு ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் அரசாணை எண் 49 குறு சிறு மற்றும் நடுத்தரத் துறைகள் நாள்: 29–10–2012 –ன் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

தகுதியும், ஆர்வமும் உள்ள இளைஞர்கள், இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவு செய்ய www.msmeonline.tn.gov.in/needs என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். இந்த இணையதளமானது, விண்ணப்பத்தின் நிலையை இணைய வழியாக கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

# தொழிற்கூட்டுறவு பிரிவு விவரங்கள்

| இணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) ( கயிறு) ( மு.கூ.பொ) | | |
|---|---|---|
| இரண்டாம் நிலை அலுவலர் | தொழிற் கூட்டுறவு பிரிவுகள் | ஒதுக்கப்பட்ட வணிக வகையிலான தொழிற்கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான பணிகள் |
| துணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) (சந்தைப்படுத்தல்) | ஐ.சி.ஏ | அனைத்து கலைக்கப்பட்ட தொழிற்கூட்டுறவு சங்கங்களில் கலைத்தல் பணி |
| துணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) (பொது) | ஐ.சி.பி | 1. தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி<br>2.16 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்<br>3. நீலகிரி தேயிலை ஏல மையம்<br>4.இன்ட்கோசர்வ் |
| துணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) (சந்தைப்படுத்தல்) | ஐ.சி.சி 1 | 1.கைவினைப் பொருட்கள்<br>2.தோல்<br>3. பாலிதீன்<br>4. நிலக்கரி & கல்கரி<br>5.பொறியியல்<br>6. தீப்பெட்டிகள்<br>7.உலோகம்<br>8.செங்கல்<br>9.தையல் |
| துணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) (சந்தைப்படுத்தல்) | ஐ.சி.சி 2 | 1.ஆட்டோ மற்றும் டாக்ஸி<br>2.சிறப்பு வணிக வகையிலான தொழிற்கூட்டுறவு சங்கங்கள்<br>3.கூட்டுறவு தொழிற்பேட்டைகள்<br>4. ஒப்பந்த தொழிலாளர் சேவை |
| துணை இயக்குநர் | ஐ.சி.ஜி | 1. கூட்டுறவு தேர்தல்<br>2. அனைத்து தொழிற்கூட்டுறவு திட்டங்களை |

| இணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) ( கயிறு) ( மு.கூ.பொ) | | |
|---|---|---|
| **இரண்டாம் நிலை அலுவலர்** | **தொழிற் கூட்டுறவு பிரிவுகள்** | **ஒதுக்கப்பட்ட வணிக வகையிலான தொழிற்கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான பணிகள்** |
| (தொழிற்கூட்டுறவு) (சந்தைப்படுத்தல்) | | கண்காணித்தல்<br>3. அனைத்து பல்வகை மற்றும் ஒருங்கிணைப்பு அறிக்கை உட்பட ஆய்வுக் கூட்டத்தின் அறிக்கை தயார் செய்தல்<br>4. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், பிரிவு 152, 153,154 தொடர்பான அனைத்து சட்டப்பூர்வ விண்ணப்பங்கள்.<br>5. தொழிற்கூட்டுறவு பிரிவு இணைய தளத்தின் கண்காணிப்பு<br>6. தொழிற்கூட்டுறவு பிரிவு ERP இணைய தள நடைமுறைப்படுத்தல்<br>7. தொழிற்கூட்டுறவு பிரிவு தொடர்பான தகவல் அறியும் உரிமைச் சட்ட விண்ணப்பங்கள் தொடர்பான ஒருங்கிணைந்த அறிக்கை தயார் செய்தல் மற்றும் விண்ணப்பங்களை கண்காணித்தல் |
| துணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு)(பொது) | ஐ.சி.டி | 1. கயிறு சங்கங்கள் மற்றும் தென்னை நார் குழுமம்<br>2. தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்<br>3. சேகோசர்வ்<br>4. அச்சக சேவை |

## ஆணையரகத்தில் பணிபுரியும் அலுவவலர்கள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகள் (பணியமைப்பு)

**3.1. ஆணையரகத்தில் பணிபுரியும் அலுவவலர்கள் மற்றும் பணியாளர்களின் கடமைகள்**

**1. கூடுதல் ஆணையர், தொழில் மற்றும் வணிகத் துறை**

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:–<br>1. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் அவர்களின் இரண்டாம் நிலை அலுவலர்.<br>2. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983 மற்றும் தமிழ்நாடு தொழில்துறை கூட்டுறவு சங்கங்களின் விதி 1988–ன் கீழ் மாநிலத்தில் உள்ள அனைத்து தொழில்துறை கூட்டுறவு / செயல்பாட்டு பதிவாளர். தொழில்துறை கூட்டுறவு பிரிவு (ஐசி பிரிவு) தொடர்பான பணியமைப்பு விஷயங்கள்.<br>3. துறையின் கண்காணிப்பு அலுவலர்.<br>4. கொள்கை திட்டமிடல், கடன் மற்றும் ஒருங்கிணைப்பு.<br>5. செலவின பிரிவு மற்றும் (தகவல் தொழில்நுட்பம் (ஐடி) முனைவுகள் மற்றும் பயிற்சி.<br>6. பொதுமக்கள் குறை தீர்க்கும் துறையின் முதன்மை அதிகாரி.<br>7. மக்கள் தொடர்புகள் மற்றும் கண்காட்சி / கருத்தரங்குகள் போன்றவை.<br>8. மத்திய திட்டங்கள் (கூட்டுறவுத் துறை),<br>பகுதி II திட்டங்கள், திட்டக்குழு, IC | 1. தொழில் கூட்டுறவு பிரிவில் உள்ள அனைத்து அலுவலர்கள்<br>2. இணை இயக்குநர் (செலவினம்)<br>3. இணை இயக்குநர் (தேயிலை)<br>4. இணை இயக்குநர் (பணியமைப்பு)<br>5. துணை இயக்குநர் (வணிகம்)<br>6. துணை இயக்குநர் (தொழில் கூட்டுறவு), சென்னை<br>7. முதன்மை கணக்கு அலுவலர்<br>8. துணை இயக்குநர் (தொழில்நுட்பம்)<br>9. மக்கள் தொடர்பு அலுவலர்<br>10. கணக்கு அலுவலர் (வரவு | ICS,<br>ICN,<br>ICM,<br>ICF,<br>ICA,<br>ICC,<br>ICH,<br>ICE,<br>SIX,<br>Exhibition<br>PD,<br>PDB,<br>C.Cell,<br>IES |

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| பிரிவு தொடர்பான நிலுவையில் உள்ள தணிக்கை மற்றும் நீதிமன்ற வழக்குகள்.<br>9. பாராளுமன்ற/சட்டமன்றக் கேள்விகள், வெட்டுப் பிரேரணைகள் மற்றும் பிற தொடர்புடைய விஷயங்கள்.<br>10. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள்.<br>11. தொழில் மற்றும் வணிக சங்கங்களிலிருந்து பெறப்பட்ட பிரதிநிதித்துவங்கள் போன்றவை.<br>12. பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தொழில்துறை மெய்காவலர் சேவை.<br>13. தமிழ்நாடு அரசு சார்பிலான தென்னை நார் வாரிய உறுப்பினர், கொச்சி.<br>14. பணியமைப்பு தவிர்த்து பிற வாகனங்கள் தொடர்பான பொருள்கள்.<br>15. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களால் வழங்கப்படும் வேறு ஏதேனும் பொருள் அல்லது பணிகள். | செலவு)<br>11. உதவி இயக்குநர் (ஏற்றுமதி இறக்குமதி சேவை)<br>12. நேர்முக உதவியாளர் (பொது)<br>13. நேர்முக உதவியாளர் (குடிசை தொழில்) | |

## 2. கூடுதல் இயக்குநர், தொழில் மற்றும் வணிகத் துறை (திட்டங்கள்)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:–<br>1. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் அவர்களின் இரண்டாம் நிலை அலுவலர்.<br>2. MSMI கொள்கை 2008–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து ஊக்கத் திட்டங்கள்<br>3. அ) NEEDS<br>ஆ) கூட்டு குழுமம் மேம்பாட்டு திட்டம்<br>4. மாவட்ட தொழில் மையங்களுக்கான திட்டங்கள் தொடர்பான அனைத்து நிர்வாக விஷயங்களும்<br>5. WTO தொடர்பான அனைத்து விஷயங்களும்<br>6. ஏற்றுமதி சார்ந்த அலகுகள்<br>7. இறக்குமதி, ஏற்றுமதி வரிகள்<br>8. வர்த்தக ஒப்பந்தங்கள்<br>9. ஏற்றுமதி கொள்கை<br>10. ஏற்றுமதி செயலாக்க மண்டலங்கள் / சிறப்பு பொருளாதார மண்டலங்கள்<br>11. IES – IEM இன் பதிவு மற்றும் கண்காணிப்பு. இந்திய அரசிற்கு தொழில்துறை உரிம விண்ணப்பங்கள் பரிந்துரை<br>12. அ) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்(செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு), மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டம் | 1. இணை இயக்குநர் (பொறியியல்)<br>2. துணை இயக்குநர் (மைய கரு)<br>3. துணை இயக்குநர் (அளவை மற்றும் புள்ளியியல்)<br>4. துணை இயக்குநர் (தொழில்நுட்பம்)<br>5. துணை இயக்குநர் (தொடர்பு களம்)<br>6. உதவி இயக்குநர் (இறக்குமதி உதவியாளர்)<br>14. உதவி இயக்குநர் (ஏற்றுமதி இறக்குமதி சேவை)<br>7. உதவி இயக்குநர் (அளவை மற்றும் புள்ளியியல்)<br>8. உதவி இயக்குநர் (மைய கரு)<br>9. அமைப்பு ஆய்வாளர் | IES<br>LC<br>CDC<br>DIC<br>PDK<br>PDSN<br>மற்றும்<br>NEEDS |

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| உட்பட<br>ஆ) ஒற்றை சாளர அனுமதி<br>13. மாவட்ட தொழில் மையங்களின் செயல்திறன் மதிப்பாய்வு<br>14. திட்டக்குழு கூட்டம் மற்றும் மாநில அளவிலான ஒற்றை சாளரக் குழுக் கூட்டம்<br>15. திட்டத் திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தல்<br>16. உலகளாவிய முதலீட்டாளர் சந்திப்பு 2015 மற்றும்<br>17. வெள்ள நிவாரணம் மற்றும் பிற நிவாரண நடவடிக்கைகள்<br>18. ஐ.டி. பூங்கா, தொழில்துறை உரிமங்கள்.<br>19. பொது மேலாளரின் மாநாடு/ஆய்வுக் கூட்டம்.<br>20. கருத்தரங்குகள்/ பரப்புதல் கூட்டம் உட்பட அனைத்து கூட்டங்கள்<br>21. முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு மனுக்கள்<br>22. நீதிமன்ற வழக்குகள் / மற்றும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் அவர்களால் ஒதுக்கப்படும் வேறு ஏதேனும் பணிகள்.<br>23. துறையின் நிலம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் IC&DIC ஆல் ஒதுக்கப்படும் பிற பணிகள். | | |

3. **கூடுதல் இயக்குநர், தொழில் மற்றும் வணிகத் துறை (சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஊக்குவிப்பு)**

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் அவர்களின் இரண்டாம் நிலை அலுவலர்.<br>2. MSMED சட்டம் 2006–ன் கீழ் தொழில்முனைவோர் குறிப்பு UAM.<br>3. MSMED சட்டம் 2006 இன் கீழ் MSE– எளிதாக்க கவுன்சில்கள்.<br>4. நலிவுற்ற பிரிவுகளின் மறுவாழ்வு – SLIIC மற்றும் SLIIC துணைக்குழு கூட்டங்கள்.<br>5. சிறு தொழில்களுக்கான ஒற்றைச் சட்டம் / சிறு மற்றும் நடுத்தர நிறுவனக் கொள்கை<br>6. சட்டசபை கேள்விகள், பாராளுமன்ற கேள்விகள், சட்டசபைகுழு பார்வையிடுதல்<br>7. தகவல் தொழில்நுட்பத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு/அரசினர் தொழில்நுட்பப் பயிற்சி மையம், கிண்டி மற்றும் கருவி பொறியியல் நிறுவனம், திண்டுக்கல். | 1. இணை இயக்குநர் (பொறியியல்) (மின்சாரம் & மின்னனுவியல்)<br>2. இணை இயக்குநர் (பொறியியல்) (இரசாயனம்)<br>3. துணை இயக்குநர் (வணிகம்)<br>4. துணை இயக்குநர் (தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்)<br>5. உதவி இயக்குநர் (மின்சாரம் & மின்னனுவியல்) | EL<br>PD<br>EDP<br>L |

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| 8. குழு மற்றும் கூட்டம் / ஆலோசனை வாரியம் போன்றவை,<br>9. தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்.<br>10. இரசாயன பிரிவு தொடர்பான அனைத்து விஷயங்களும்<br>11. மின்சாரம் & மின்னனுவியல் தொடர்பான அனைத்து விஷயங்களும்<br>12. தகவல் அறியும் உரிமைச் சட்டம்/ஆணையரகத்தின் மேல்முறையீட்டு அலுவலர்<br>13. வாரியங்களில் நடைபெறும் கூட்டங்கள், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் அவர்கள் உறுபினர்/ இயக்குனர்/ ஒருங்கினைப்பாளராக உள்ள குழுக் கூட்டங்கள்<br>14. MSME வாரியக் கூட்டங்கள்<br>15. CM's Banks Awards உட்பட அனைத்து விருதுகளும் | | |

## 4. துணை இயக்குனர் (மைய கரு)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. மதிப்பாய்வு போன்ற மத்திய நிதியுதவி தொடர்பான திட்டங்கள்<br>2. சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தரவுப் பட்டியலைத் தயாரித்தல், DC(MSME), புது தில்லி தேவைக்கேற்ப மாதிரி ஆய்வுகள் & குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறவனங்களின் கணக்கெடுப்பு நடத்துதல்<br>3. தொழில்துறை உற்பத்தி குறியீட்டின் தரவு சேகரிப்பு (IIP) | உதவி இயக்குநர் (மைய கரு) | PDSN<br>CDC |

## 5, முதன்மை கணக்கு அலுவலர்

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. கணக்குகள்.<br>2. உள் தணிக்கை.<br>3. பொது கணக்காளரின் தணிக்கை.<br>4. வரவு செலவு பட்டியல்<br>5. செலவினக் கட்டுப்பாடு | 1. கணக்கு அலுவலர் (பட்டியல்)<br>2. கணக்கு அலுவலர் (தணிக்கை)<br>3. கணக்கு அலுவலர் (பணம்) | AA<br>AB<br>ABA<br>ACA<br>ACB<br>ADA<br>ADB<br>SAP |

| | | |
|---|---|---|
| 6. அரசு ஊழியர்களுக்கு முன்பணம்<br>7. ஓய்வூதியம், DCRG போன்றவை (இணை இயக்குநர் (பணியமைப்பு)க்கான கோப்புகள்)<br>8. ஊதிய பட்டியல், பயணப்படி. எதிர்பாரா செலவினம் போன்றவை<br>9. பொது கணக்கு குழு கூட்டம்<br>10. மருத்துவ செலவு திரும்ப பெறும் பட்டியல்<br>11. இணை இயக்குநர் (பணியமைப்பு)க்கான GPF கோப்புகள்<br>12. அனைத்து செயலிழந்த அலகுகள்<br>13. கணக்குகள் பிரிவின் கீழ் வரும் பொருள்கள்<br>14. RTI சட்டம்– கணக்கு பிரிவு | | PB |

## 6. துணை இயக்குநர் (வணிகம்)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| கீழ் கண்ட பொருட்கள் தொடர்பான கோப்புகள்<br>1. கார்ப்பரேஷன் / வாரியங்கள் போன்றவற்றின் வாரியக் கூட்டங்கள்.<br>2. துறை ஐ,எஸ்.ஓ சான்றிதழ் தொடர்பான கோப்புகள்<br>3. GI கோப்புகள் / லாஜிஸ்டிக்ஸ் கூட்டம்<br>4. தேசிய பசுமை தீர்ப்பாய வழக்கு கோப்புகள்<br>5. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் / சுற்றுச்சூழல் மற்றும் வன துறை கோப்புகள்<br>6. தமிழ்நாடு மாநில கடலோர மண்டல | | |

| | | |
|---|---|---|
| மேலாண்மை ஆணையக் கூட்ட கோப்புகள்<br>7. பொது மேலாளர்கள் திறனாய்வு கூட்டம்<br>8.அறிவிப்புகளின் ஆய்வுக் கோப்புகள்<br>9. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் / முதல்வரின் முகவரி மனுக்கள்/ நீங்கள் நலமா / மக்களுடன் முதல்வர்<br>10.இந்திய அரசின் மனுக்கள்<br>11. மதிப்பீட்டுக் குழு கோப்புகள்<br>12. குறு, சிறு, மற்றும் நடுத்தர நிறுவன வாரியக் கூட்டங்களின் கோப்புகள்<br>13. முதலமைச்சர் / தலைமைச் செயலாளர் ஆய்வு மற்றும் கலெக்டர் போலீஸ் வனத்துறை அதிகாரப்பூர்வ திறனாய்வு கோப்புகள் | | |

## 7, துணை இயக்குனர் (தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்.<br>2. தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்பான பொருள்கள்.<br>அ)அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம், கிண்டி.<br>ஆ)கருவி பொறியியல் நிறுவனம், திண்டுக்கல். | | EDP |

## 8. இணை இயக்குனர் (உற்பத்தி கணக்கு)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br><br>1) அனைத்து தொழிற்கூட்டுறவு சங்கங்களுக்கான விற்பனை மற்றும் இலாப நட்டம் இல்லா விற்பனை இலக்குகளை நிர்ணயித்தல்<br>2) அனைத்து தேயிலை தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உற்பத்தி சார்ந்த சங்கங்களுக்கான உற்பத்தி இலக்குகளை நிர்ணயித்தல்.<br>3) அனைத்து தொழிற்கூட்டுறவு சங்கங்களின் நிதி சார்ந்த செயல்பாடுகளை இணையவழி தரவுதளம் மூலமாக மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>4) சிறப்பாக செயல்படும் சங்கங்களை ஆராய்ந்து, அவற்றை விருதுக்காக பரிந்துரை செய்தல்.<br>5) தொழிற்கூட்டுறவு சங்கங்களின் வரவு செலவு தொடர்பாக வரவு செலவு பட்டியல் மதிப்பீடு, மறுமதிப்பீடு மற்றும் இறுதியாக மாற்றி அமைக்கப்பட்ட ஒதுக்கீடு ஒப்பளிப்பு ஆகியவற்றை ஒதுக்கீடு செய்தல்.<br>6) நிறுவனங்களின் கலைப்பு தொடர்பான பணிகள்.<br>7) தொழிற்கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி சார்ந்த உள்ளீடுகளை வழங்குதல்.<br>8) அணுகுமுறை ஆவணங்கள் மற்றும் நிலை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | 1) துணை இயக்குனர் (உற்பத்தி கணக்கு)<br><br>2) உதவி இயக்குனர் (உற்பத்தி கணக்கு) | C Cell<br><br>TALCO |

## 9. இணை இயக்குனர் (பணியமைப்பு)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. பணியமைப்பு தொடர்பான அனைத்து பொருள்களும்<br>(i) பதவி உயர்வுகள்<br>(ii) இடமாற்றம் மற்றும் பணியமர்த்துதல்<br>(iii) ஆட்சேர்ப்பு<br>(iv) GPF திரும்பப் பெறுதல்<br>(v) விடுப்பு ஒப்பளிப்பு மற்றும் ஒப்புவிப்பு<br>(vi) ஓய்வூதியம்<br>(vii) பிரதிநிதித்துவம்<br>(viii) பயிற்சி<br>(ix) அலுவலக நடைமுறை.<br>2. பொது நிர்வாகம் மற்றும் எதிர்பாராதன<br>3. ஒழுங்கு வழக்குகள்<br>4. பணியமைப்பு தொடர்பான நீதிமன்ற வழக்குகள்<br>5. அலுவலக ஆய்வு | 1. துணை இயக்குநர் (பொது)<br>2. நேர்முக உதவியாளர் (பொது)<br>3. நேர்முக உதவியாளர் (குடிசை தொழில்)<br>4. மக்கள் தொடர்பு அலுவலர்<br>5. கணக்கு அலுவலர் (பணம்)<br>6. கணக்கு அலுவலர் (தணிக்கை) | ICE<br>EA<br>EB<br>EC<br>EG<br>EDS<br>EE<br>FC<br>G<br>SIX<br>L<br>ADA |

10.துணை இயக்குனர் (தொடர்பு பிரிவு)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. மூலதன மானியம், குறைந்த அழுத்த மின் கட்டணம் (LTPT), சம்பளப்பட்டியல் மானியம் , பின்முனை வட்டி மானியம், ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம், தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியதிட்டம்,மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்,காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடு பதிவுக்கான ஊக்கத்தொகை, முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்குதல் ஆகிய மானிய திட்டங்கள் தொடர்பான ஒவ்வொரு காலாண்டிற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் மறு நிதி ஒதுக்கீடு.<br>2. அனைத்து மானியங்கள் தொடர்பான தெளிவுபடுத்துதல், காலதாமதத்திற்கான ஆணை வழங்குதல் மற்றும் முறையீடுகள்.<br>3. பிரதம மந்திரி உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம்<br>4. உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024<br>5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கொள்கை குறிப்பு, 2021 தொடர்பான திருத்தங்கள்.<br>6. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கொள்கை குறிப்பு தொகுத்தல்.<br>7. மானியங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கான அனுமதி வழங்குதல்.<br>8. தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் பெறப்பட்ட மனுக்கள்.<br>9. மானியங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் | கூடுதல் இயக்குநர் (மாவட்ட தொழில் மையம்) | தொடர்பு கலம் |
| 10. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள் | இணை இயக்குநர் ( பொறியியல்) | |

11. துணை இயக்குனர் (தொழில்நுட்பம்)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்:<br>1. துறையின் தகவல் தொழில்நுட்ப முயற்சிகளுக்கான முதன்மை அலுவலர். கணினிகள், மென்பொருள் மற்றும் வன்பொருள் பொருட்கள் தொடர்புடைய கொள்முதல் மற்றும் பராமரிப்பு. NIC உடன் தொடர்புகொள்வது<br>2. UYEGP, AABCS, KKT, NEEDS. PMEGP, ACP, BRAP. ஒற்றை சாளரம் அனுமதி., மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு<br>3. மாவட்ட தொழில் மையங்களில் செயல்படுத்தப்படும் அனைத்து சுயவேலை வாய்ப்பு திட்டங்களைப் பற்றிய விவரங்களைத் தயாரித்தல்<br>4. பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் அவர்களின் மாதாந்திர பயணத்திட்டம்<br>5. புதிய மாவட்டம் உருவாக்கம் மற்றும் புனரமைப்பு | 1. அமைப்பு ஆய்வாளர்<br>2. உதவி நிரலர் | Computer Section<br>DIC.<br>NEEDS Section |

12.இணை இயக்குனர், தொழில் மற்றும் வணிகத் துறை (தொழில் கூட்டுறவு) கயிறு

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| கீழ்காணும் அனைத்து பொருள்களும்:<br>1. தொழில் கூட்டுறவு சங்கங்கள்.<br>2. தொழில் கூட்டுறவு தொடர்பான அனைத்து திட்டங்களையும் ஆய்வு செய்தல்<br>3. தொழில் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான தகவல் அறியும் உரிமைச் சட்டம் மனுக்களை பரிசீலனை செய்து பதிலுரை அனுப்புதல்<br>4. கூட்டுறவு தணிக்கை இயக்குனருடன் ஒருங்கிணைந்து தொழில் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையை விரைவாக முடித்தல்<br>5. TABCEDCO & TAMCO திட்டங்களை தொழில் கூட்டுறவு துறையில் நடைமுறைப்படுத்துதல்<br>6. தொழில் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் கலைப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்<br>7. தொழில் கூட்டுறவு சங்கங்களை மதிப்பாய்வு செய்தல்<br>8. மாநிலத்தில் உள்ள தொழில் கூட்டுறவு சங்கங்களின் பதிவு மற்றும் நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல்<br>9. தென்னை நார் தொழில் கூட்டுறவு சங்கங்களில் (MDA), SFURTI மற்றும் REMOT போன்ற உதவி திட்டங்களை செயல்படுத்துதல்<br>10. தொழில் கூட்டுறவு சங்கங்களின் தேர்தலை நடத்துதல், இத்தேர்தலின் | 1. துணை இயக்குநர் (தொழிற்கூட்டுறவு) (பொது)<br>2. துணை இயக்குநர் (சந்தைப்படுத்தல்)<br>3. உதவி இயக்குநர் (சந்தைப்படுத்தல்)<br>4. உதவி இயக்குநர் (கயிறு)<br>5. உதவி இயக்குநர் ( தீப்பெட்டி) | ICA, ICB, ICC, ICD, ICG |

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| போது தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் அவர்கள் மாநில தேர்தல் அதிகாரியாக செயல்படுவார். இணை இயக்குநர் (தேயிலை), பொது மேலாளர்கள், மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் துணை இயக்குனர் (தொழில் கூட்டுறவு) சென்னை ஆகியோர் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக செயல்படுவர். மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் கீழ் தேர்தல் அதிகாரிகள் செயல்படுவர். இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தொழில் கூட்டுறவு சங்கங்களின் தேர்தலை நடத்துவர் | | |

13.துணை இயக்குனர் (தொழில் கூட்டுறவு) பொது

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| கீழ்காணும் அனைத்து பொருள்களும்:<br>1. இடமாற்றம், பணியிடங்கள் போன்ற தொழிற் கூட்டுறவு பிரிவு அலுவலர்களின் அனைத்து கோப்புகளையும் ஆய்வு செய்து மற்றும் வழிசெலுத்துதல்<br>2. மைய அலுவலகத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர்களுக்கான ரகசிய அறிக்கைகள் மற்றும் தொழில் கூட்டுறவு அலுவலர்கள், தொழில் கூட்டுறவு மேற்பார்வையாளர் மற்றும் தொழில் கூட்டுறவு உதவி மேற்பார்வையாளர் | உதவி இயக்குனர் (கயிறு) | EE(IC)<br>ICB<br>ICD |

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| ஆகியோருக்கான பதிவுத் தாள்களைத் தயாரித்தல்.<br>3. TNPSC மற்றும் TAICO வங்கிகளில் நடைபெறும் தொழில் கூட்டுறவு துறை தொடர்பான பல்வேறு கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.<br>4. TAICO வங்கி ,Sagoserve மற்றும் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளிடமிருந்து பெறப்படும் பணி நீட்டிப்பு தொடர்பான முன்மொழிவுகளை ஆய்வு செய்தல் மற்றும் வழிநடத்துதல்.<br>5. தொழில் கூட்டுறவு அலுவலர்களின் திறன் மேம்பாடு தொடர்பான பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளை நடத்துதல். இது தொடர்பான அறிக்கையை கூடுதல் ஆணையர், இணை இயக்குநர் (கயிறு) மற்றும் இணை இயக்குநர் (பணியமைப்பு) ஆகியோருக்கு சமர்ப்பித்தல். | | |

14.துணை இயக்குனர் (தொழில் கூட்டுறவு) சந்தைப்படுத்துதல்

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| ICA, ICC மற்றும் ICG பிரிவுகளின் அனைத்து கோப்புகளையும் ஆய்வு செய்து வழிசெலுத்துதல் மற்றும் இணை இயக்குநர் (தொழிற் கூட்டுறவு)அவர்களிடம் அறிக்கை செய்தல். | 1. உதவி இயக்குனர் (சந்தைப் படுத்துதல்)<br>2. உதவி இயக்குனர் (தீப்பெட்டி) | ICA<br>ICC<br>ICG |

15. இணை இயக்குனர் (பொறியியல்)

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| இது தொடர்பான அனைத்து பொருள்களும்<br>1. உத்யம் பதிவு சான்றிதழ் (URC)<br>2. பாராளுமன்றம் மற்றும் சட்டசபை கேள்விகள்<br>3. ஏற்றுமதி மையம்<br>4. கைவினைப்பொருட்கள் மற்றும் குடிசைத்தொழில்கள் பதிவு<br>5. நிலக்கரி மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் இறக்குமதி செய்வதற்கான பரிந்துரை வழங்குதல்<br>6. தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005<br>7. மைய கரு பிரிவின் கீழ் உள்ள மத்திய நிதியுதவி திட்டம், தொழில் துறை உற்பத்தி குறியீட்டின் தரவு சேகரிப்பு (IIP)<br>8. குறு மற்றும் சிறு நிறுவனங்கள் வசதியாக்க குழு (MSE–FC)<br>9. தொழில் துறை தொழில் முனைவோர் குறிப்பு வழங்குவதற்கு ஒன்றிய அரசுக்கு பரிந்துரை வழங்குதல்<br>10. தொழில் உரிமம் வழங்குவதற்கு | 1. துணை இயக்குநர் (மைய கரு)<br>2. துணை இயக்குநர் (அளவை மற்றும் புள்ளியியல்)<br>3. உதவி இயக்குநர் (அளவை மற்றும் புள்ளியியல்)<br>4. உதவி இயக்குநர் (மைய கரு)<br>5. உதவி இயக்குநர் (ஏற்றுமதி இறக்குமதி சேவை) | KA<br>PDSN<br>PDK<br>IES<br>CDC |

| ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் | இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் | இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் |
|---|---|---|
| ஒன்றிய அரசுக்கு பரிந்துரை வழங்குதல்.<br>11. தொழில் நிறுவனங்களின் கணக்கெடுப்பு | | |

16. இணை இயக்குநர் (பொறியியல்) (இரசாயனம்)

| | | | |
|---|---|---|---|
| **<u>கீழ் உள்ளவை தொடர்பான அனைத்து பணிகளும்</u>**<br><br>1 இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி, சென்னை–32<br><br>தகவல் அறியும் உரிமைச் சட்ட2005–இரசாயனப் பிரிவுடன் தொடர்பானவை. | 1)திருமதி.பி.இசைசெல்வி துணை இயக்குனர் (இரசாயனம்)<br>2) திருமதி.வி.உமாராணி,, துணை இயக்குனர் (இரசாயனம்)<br>3) திருமதி . டி.ஜீவா, முதுநிலை இரசாயனர்<br>4) திருமதி . டி.கவிதா முதுநிலை இரசாயனர்<br>5)திரு.எம்.ஜே.சுந்தர்பாண்டி முதுநிலை இரசாயனர்<br>6) திரு.வி.க.பேரருளாளன் , முதுநிலை இரசாயனர்<br>7) திரு.டி.சுதாகர், முதுநிலை இரசாயனர்<br>8) திரு ஏ. சீனிவாசன் , உதவி கண்காணிப்பாளர் | ➢ சிமெண்ட ,மணல், உருக்கு கம்பிகள், டைல்ஸ், செங்கல், தண்ணீர் போன்ற கட்டுமான பொருட்கள், இரசாயனங்கள், கனிமங்கள், தாதுக்கள், எண்ணெய்கள், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் சோப்புகள் போன்ற பொருட்களை ஆய்வு செய்தல் | **இணை இயக்குநர் (பொறியியல்),**<br>இராயசனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், திரு.வி.க தொழிற்பேட்டை கிண்டி,சென்னை–32<br>மின்னஞ்சல்:<br>jd.ctal@gmail.com<br>**<u>தொலைபேசி எண்:</u>**<br>044–22501641 |
| 2) மண்டல சோதனைக்கூடம், கோயம்புத்தூர், | திருமதி ஆர்.சுபஸ்ரீ , துணை இயக்குனர் (இரசாயனம்) | ➢ DL, RL உரிமம் வழங்குவதற்காக தொழில் நிறுவனங்கள், மருத்துவமனை, கல்லூரிகள் மற்றும் ஆய்வகங்கள் போன்றவற்றை புலத்தணிகை செய்து அறிக்கை வழங்குதல் | மின்னஞ்சல்:<br>rtlkovai@gmail.com<br>**<u>தொலைபேசி எண்:</u>**<br>0422–2627065 |
| 3) மண்டல சோதனைக்கூடம், மதுரை | திருமதி எஸ்.விஜயசுஜாதா , துணை இயக்குனர் (இரசாயனம்) | | மின்னஞ்சல்:<br>rtlmadurai@gmail.com<br>**<u>தொலைபேசி எண்:</u>**<br>0452–2566588 |
| 4) மண்டல சோதனைக்கூடம், சேலம் | திரு எம்.பாபு, முதுநிலை இரசாயனர் | | மின்னஞ்சல்:<br>rtlsalem@gmail.com<br>**<u>தொலைபேசி எண்:</u>**<br>0427-2295218 |

| | | | |
|---|---|---|---|
| 5) மண்டல சோதனைக்கூடம், தூத்துக்குடி. | திரு என்.ஸ்ரீ ராமகிருஷ்ணன் , முதுநிலை இரசாயனர் | | மின்னஞ்சல்: rtltuticorin@gmail.com <br> **தொலைபேசி எண்:** 0461-2320944 |
| 6) அரசு பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், விருத்தாசலம் | திருமதி கே.ஆர்.வனஜா, முதல்வர் | ➢ பீங்கான் தொழில்நுட்பத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல் | மின்னஞ்சல்: ictvri@gmail.com |